ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 313) Feb (2) / 2020

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் 5

3. தத்வ த்ரயம்...12

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..15

5. சது: ச்லோகீ (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)................................24

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 133)

11. ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்ஜீத ஸ்வாங்கை: பஞ்சபிரந்விதாம்
ப்ராதிகூல்யம் பரித்யக்தம் ஆநுகூல்யம் ச ஸம்ச்ரிதம்
12. மயா ஸர்வேஷு பூதேஷு யதாசக்தி யதாமதி
அலஸஸ்ய அல்ப சக்தேச்ச யதாவச்வாவிஜாநத:
13. உபாய: க்ரியமாணாஸ்தே நைவ ஸ்யுஸ்தாரகா மம
அத: அஹம் க்ருபணோ தீநோ நிர்லேபச்சாப்யகிஞ்சந:
14. லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ திவ்யோ காருண்யரூபயா
ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தே அபி ச கீயதே
15. யந்மே அஸ்தி துஸ்த்யஜம் கிஞ்சித் புத்ராதாரக்ரியாதிகம்
ஸமஸ்தமாத்மநா ந்யஸ்தம் ஸ்ரீபதே தவ பாதயோ:
16. சரணம் பவ தேவேச நாத லக்ஷ்மீபதே மம
ஸக்ருதேவம் ப்ரபந்நஸ்ய க்ருத்யம் நைவாந்யதிஷ்யதே

பொருள் – அதன் பின்னர் ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைக் கைக்கொள்ள வேண்டும். இவை என்னவென்றால்: "பகவானுக்கு விரோதமாக உள்ளவற்றைக் கைவிடுதல், அவனுக்கு ஏற்புடையதைக் கைக்கொள்ளுதல், எனது சக்திக்கு ஏற்ப அனைத்து உயிர்களிடத்தும் அதே போன்று இருத்தல்; எனக்கு உள்ள சக்தியானது மிகவும் குறைவானதே என்பதாலும், எனக்கு மற்றவற்றைக் குறித்த ஞானம் இல்லை என்பதாலும், என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேறு எதனையும் நான் நாடமாட்டேன்; ஆகவே எனக்கு எந்தவிதமான உடைமைகளோ அல்லது துணையோ இல்லை; "மஹாலக்ஷ்மியுடன் கூடியவனும், கருணையே வடிவமாக உள்ளவனும் ஆகிய ஹ்ருஷீகேசன் மற்றும் மஹாலக்ஷ்மி ஆகிய

இருவருமே அனைவருக்கும் ரக்ஷகர்கள்” என்று அனைத்து ஸித்தாந்தங்களும் வேதாந்தங்களும் கூறுவதை நான் அறிகிறேன்; என்னால் துறப்பதற்குக் கடினமாக உள்ள மனைவி, புத்திரன் போன்ற அனைத்தையும், என்னையும் சேர்த்து, மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய உனது திருவடிகளில் சமர்ப்பணம் செய்கிறேன்; அனைத்து தேவர்களுக்கும் நாதனே! மஹாலக்ஷ்மியின் நாயகனே! உன்னைச் சரணம் புகுந்து எனது ரக்ஷகனாக நீ இருப்பாயாக”, என்பதாகும். இப்படியாகச் சரணம் புகுந்த ஒருவனுக்குச் செய்யவேண்டியது வேறு எதுவும் இல்லை.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 313)

பெரியபெருமாளின் திருவடிகளை வர்ணித்தல்

உறுசகடம் உடைய ஒரு காலுற்று உணர்ந்தன
உடன் மருதம் ஒடிய ஒரு போதில் தவழ்ந்தன
உறி தடவும் அளவில் உரலோடு உற்று நின்றன
உறு நெறி ஓர் தருமன் விடு தூதுக்கு உகந்தன
மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன
மலர்மகள் கை வருட மலர் போதிற் சிவந்தன
மறு பிறவி அறு முனிவர் மாலுக்கு இசைந்தன
மனுமுறையில் வருவது ஓர் விமானத்து உறைந்தன
அறமுடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன
அடல் உரக படம் மடிய ஆடிக் கடிந்தன
அறு சமயம் அறிவு அரிய தானத்து அமர்ந்தன
அணிகுருகை நகர் முனிவர் நாவுக்கு அமைந்தன
வெறியுடைய துவளமலர் வீறுக்கு அணிந்தன
விழுகரி ஓர் குமரன் என மேவிச் சிறந்தன
விறல் அசுரர் படை அடைய வீயத் துரந்தன
விடல் அரிய பெரியபெருமாள் மென் பதங்களே

பொருள் – யாராலும் விட இயலாதபடி உள்ள பெரியபெருமாளுடைய மென்மையான திருவடிகள் எப்படி உள்ளன என்றால்: சகடாசுரன் உடையும்படியாக முன்பு கூர்மையாக நோக்கியபடி இருந்தன; ஒன்றாகச்

சேர்ந்திருந்த மருதமரங்கள் ஒடிந்து விழும்படியாக ஒரு காலத்தில் தவந்தன; வெண்ணெய் முதலானவற்றை வைத்திருந்த உறியைத் தொட்ட நேரத்தில், உரலோடு ஒன்றாகக் கட்டப்பட்டன; சிறந்த நெறியுடன் நிற்கும் ஒரே தர்மபுத்ரன் அனுப்பிய தூதிற்காக மகிழ்ந்தபடி சென்றன; கம்சன் அனுப்பிய கொடியவர்கள் அழியும்படியாக பிருந்தாவனத்திற்கு வந்தன; தாமரையில் வீற்றுள்ள பெரியபிராட்டியாரின் மென்மையான வருடலைக் கூடப் பொறுக்க இயலாமல் மலரைக் காட்டிலும் சிவந்தன; அடுத்த பிறவியை நீக்கவல்ல முனிவர்களுடைய பக்தியை ஏற்றன; மனுவம்சத்தில் இந்த உலகிற்கு வந்த ஸ்ரீரங்க விமானத்தில் எப்போதும் உள்ளன; தர்மம் பொருந்திய அர்ஜுனன் அமர்ந்த திருத்தேரில் காணப்பட்டன; வலிமையான காளியனுடைய படங்கள் அனைத்தும் நலியும்படியாக ஆடின; ஆறு மதங்களால் அறிய இயலாத பரமபதத்தில் அமர்ந்தன; ஆபரணமாகத் திகழும் ஆழ்வார் திருநகரியின் எஜமானராகிய நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு ஏற்றபடி விளங்கின; பரிமளம் கொண்ட துளசியின் அழகுக்கு ஏற்றபடியான அழகுடன் விளங்கின; உத்தரையின் கர்ப்பத்திலிருந்து விழுந்த கரிக்கட்டையை, பரீக்ஷித் என்னும் ஒப்பற்ற குமரனாகச் செய்தன; வலிமையுள்ள அசுரர் படைகளை விரட்டின.

இந்த நூலைக் குறித்து உரைத்தல்

இதி யதிராஜ மஹாநஸ பரிமள பரிவாஹ வாஸிதாம் பிபத
விபுத பரிஷத் நிஷேவ்யாம் வேதாந்த உதயந ஸம்ப்ரதாய ஸுதாம்

பொருள் – இப்படியாக இதுவரை கூறப்பட்டதும், எம்பெருமானாருடைய திருமடைப்பள்ளியின் பரிமளத்தைப் பெற்றதும், அனைத்தும் அறிந்தவர்களால் அனுபவிக்கும் தகுதி கொண்டதும், வேதாந்த சாஸ்த்ரத்தின் உதயநராக உள்ள திருமடைப்பள்ளியாச்சானுடைய ஸம்ப்ரதாயம் கொண்டதும் ஆகிய அமிர்தத்தைப் பருகுவீர்களாக.

கலகண்ட குண ஆஸ்வாத்யே காமஸ்ய அஸ்த்ரே நிஜாங்குரே
நிம்ப வ்ருத்திபி: உத்கீர்ணே ந சூத: பரிதப்யதே

பொருள் – மாமரம் ஒன்று, குயில்களால் நன்றாகச் சுவைத்து உண்ணப்படுவதும், மன்மதனுடைய செயல்களுக்கு ஏற்றதாக உள்ளதும் ஆகிய தனது தளிர் இலைகளைக் கொண்டு வாழ்கின்ற விலங்குகளால், அந்தத் தளிர்கள் உமிழப்பட்டாலும் வருத்தம் அடைவதில்லை (இதனைப் போன்றே இந்த நூலை, பொறாமை காரணமாகத் தள்ளினாலும், எந்தக் குறையும் இல்லை).

முன்பெற்ற ஞானமும் மோகம் துறக்கலும் மூன்று உரையில்
தன்பற்ற தன்மையும் தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித்தகவும்
மன்பற்றி நின்ற வகை உரைக்கின்ற மறையவர்பால்
சின்பற்றி என் பயன் சீர் அறிவோர்க்கு இவை செப்பினமே

பொருள் – மன்னனாக உள்ள ஸர்வேச்வரனைச் சரணம் என்று அடைந்து, அதன் விளைவாக உயர்ந்த நிலையை அடைந்த விதத்தை உபதேசிப்பவர்களும், வேதங்களை நன்றாக அறிந்தவர்களும் ஆகிய சான்றோர்களிடம் உன்னதமான ஞானத்தைப் பெறுவதற்கு சிலர் விழையக்கூடும். இவர்கள் பொருட்டு, "நம்முடைய ஆசார்யர்களிடமிருந்து நாம் பெற்ற ஞானமும், மயக்கத்தை நீக்குதலும், மூன்று ரஹஸ்யங்களில் நமக்கு நம்மைக் குறித்த சுதந்திரம் இல்லாமையும், தன்னை வந்து பணிந்தவர்கள் விஷயத்தில் ஏற்படும் க்ருபையும்" என்பதான பல விஷயங்களை இந்த நூலில் நாம் உரைத்தோம். இதனைக் கருத்தில் கொள்ளாமல் அற்ப விஷயங்களில் ஈடுபடுதலால் என்ன பயன் உள்ளது?

நிர்விஷ்டம் யதிஸார்வபௌம வசஸாம் ஆவ்ருத்திபிர் யௌவநம்
நிர்தூத இதர பாரதந்த்ர்ய நிரயா நிதா: ஸுகம் வாஸரா:
அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திமஸதாம் கர்வ: அபி நிர்வாபித:
சேஷ ஆயுஷி அபி சேஷி தம்பதி தயா தீக்ஷாம் உதீக்ஷாமஹே

பொருள் – யதிராஜருடைய நூல்களைக் கற்பதில் இளமைக்காலம் நன்றாகக் கழிந்தது. மற்றவர்களுக்கு வசப்பட்டிருத்தல் என்பதான நரகம் கழிந்த நாள்களும் இன்பமாகவே கழிக்கப்பட்டன. சான்றோர்களுடைய அனுக்ரஹத்தைப் பெற்ற

பின்னர், மற்ற மதங்களுடைய செருக்கும் ஒடுக்கப்பட்டது. இனி உள்ள காலங்களில், நம்முடைய எஜமானர்களாகிய திவ்யதம்பதிகளுடைய கருணையால் உண்டாகும் ஸங்கல்பத்தை எதிர்நோக்கி நிற்கிறோம்.

செப்பச் செவிக்கு அமுது என்னத் திகழும் செழுங்குணத்துத்
தப்பு அற்றவருக்குத் தாமே உகந்து தருந்தகவால்
ஒப்பற்ற நான்மறை உள்ளக் கருத்தில் உறைத்து உரைத்து
முப்பத்து இரண்டு இவை முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே

பொருள் – உயர்ந்த குணங்களில் சற்றும் பிறழாத அதிகாரிகள் விஷயத்தில் ஸர்வேச்வரனும் அவனுடைய அடியார்களும் தாங்களாகவே மகிழ்வுடன் அளிக்கின்ற கருணையால், ஈடில்லாத நான்கு வேதங்களுடைய ஆழ்பொருளில் நன்றாக பரிசயம் செய்து உரைக்கப்பட்டவையும், கூறப்படும்போது காதுகளுக்கு அமிர்தம் என்று உரைக்கும்படியாகத் திகழ்பவையும் ஆகிய இந்த முப்பத்து இரண்டு பாசுரங்களும், மூன்றுவகையான தமிழுக்கு ஏற்ற அலங்காரம் ஆகும்.

ஆஸ்திக்யவாந் நிசித புத்தி: அநப்யஸூயு:
ஸத் ஸம்ப்ரதாய பரிசுத்த மநா: ஸத் அர்த்தா
ஸங்கேத பீதிரஹித: ஸத்ருணேஷு அஸக்த:
ஸத் வர்த்தநீம் அநுவிதாஸ்யதி சாச்வதீம் ந:

பொருள் – ஆஸ்திகனாகவும், பொறாமை அற்றவனாகவும், உயர்ந்த ஸம்ப்ரதாயம் காரணமாகப் பரிசுத்தமான மனம் கொண்டவனாகவும், சிறந்த பொருள்களையே விரும்புபவனாகவும், அவசியமற்ற கட்டுப்பாடுகளுக்கு அச்சம் கொள்ளாதவனாகவும், துரும்பு போன்ற தாழ்ந்த பலன்களில் ஈடுபாடு இல்லாதவனவாகவும் உள்ள ஒருவன், நம்முடைய நித்யமான இந்த நூலில் கூறப்பட்டுள்ள சிறந்த கருத்துக்களை எப்போதும் பின்பற்றுவான்.

மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய் என்று ஓர்வார்
மன்னிய கூர் மதி உடையார் வண்குணத்தில்

குறை உரைக்க நினைவில்லார் குருக்கள் தம்பால்
கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நன்மை
சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால்
சிதையாத திண் மதியோர் தெரிந்தது ஓரார்
பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும் எங்கள்
பொன்றாத நன்னெறியில் புகுதுவாரே

பொருள் – வேதங்களில் கூறப்படுகின்ற ஆழ்பொருள்கள் அனைத்தும் உண்மையே என்று உறுதியாக எண்ணுபவர்களாகவும், திடமானதும் கூர்மையானதும் ஆகிய புத்தியைக் கொண்டவர்களாகவும், மற்றவர்களுடைய குணங்களில் குற்றம் காண எண்ணம் இல்லாதவர்களாகவும், ஆசார்யர்களிடம் சிறந்த விஷயங்களைப் பெறுபவர்களாகவும், சிறையாக உள்ள ஸம்ஸாரத்தை மேன்மேலும் வளர்க்கின்றவர்களுடைய கட்டுப்பாட்டால் கெடாத உறுதியானவர்களாகவும், அற்பமானவற்றில் ஈடுபாடு கொள்ளாதவர்களாகவும் உள்ளவர்கள், பூமியைக் காட்டிலும் பொறுமையான ஆசார்யர்களால் காண்பிக்கப்பட்ட எங்களுடைய அழியாத மார்க்கத்தில் சேர்வர்.

இது வழி இன்னமுது என்றவர் இன்புலன் வேறு இடுவார்
இது வழியாம் அலவென்று அறிவார் எங்கள் தேசிகரே
இது வழி எய்துக என்று உகப்பால் எம் பிழை பொறுப்பார்
இது வழியா மறையோர் அருளால் யாம் இசைந்தனமே

பொருள் – பலராலும் இனிமையானது என்று கொண்டாடப்படும் அற்பமானவற்றை விலக்கி வைப்பவர்களும்; பகவத் க்ருபையே மோக்ஷ வழி என்றும், மற்றவை ஏதும் அல்ல என்றும் அறிபவர்களும் ஆகிய உயர்ந்த ஆசார்யர்களே, “இங்கு கூறப்பட்ட ப்ரபத்தி வழியில் நிலையாக நடப்பீர்களாக” என்று அனைவருக்கும் உபதேசிப்பதில் மகிழ்கிறார்கள். அதன் விளைவாக எங்களுடைய அனைத்து பிழைகளையும் பொறுத்துக் கொண்டு, இங்கு கூறப்பட்ட வழியே இனிமையான அமிர்தம் ஆகும் என்று உபதேசித்தவர்கள் அவர்களே

ஆவர். எனவே வேதங்களின் வழி நிற்கின்ற அவர்களுடைய க்ருபையால், இந்த வழியே சிறந்தது என்று நாங்கள் ஏற்கிறோம்.

எட்டும் இரண்டும் அறியாத எம்மை இவை அறிவித்து
எட்டவொண்ணாத இடந்தரும் எங்கள் அம்மாதவனார்
முட்ட வினைத்திரள் மாள முயன்றிடும் அஞ்சல் என்றார்
கட்டெழில் வாசகத்தால் கலங்கா நிலை பெற்றனமே

பொருள் – எட்டு எழுத்துக்கள் கொண்ட திருமந்த்ரம் மற்றும் இரண்டு அடிகள் கொண்ட த்வயம், சரமச்லோகம் ஆகியவற்றை அறியாத எங்களுக்கு இவற்றை உபதேசம் செய்து, இதன் மூலம் எளிதில் எட்டுவதற்கு இயலாத பரமபதத்தை அளிப்பவனாகிய ஸ்ரீமந்நாராயணன், “உங்களுடைய கர்ம கூட்டங்கள் அனைத்தும் அழியும்படியாக ப்ரபத்தியைக் கைக்கொள்வீராக” என்று அருளிச்செய்தான். அப்படிப்பட்ட கட்டு குலையாத அழகுடன் கூடியதான அவனுடைய சரமச்லோகத்தின் மூலம் நாங்கள் கலக்கம் அடையாத நிலையைப் பெற்றோம்.

வானுள் அமர்ந்தவருக்கும் வருந்த வரும் நிலைகள்
தான் உளனாய் உகக்கும் தரம் இங்கு நமக்கு உளதே
கூன் உள நெஞ்சுகளால் குற்றம் எண்ணி இகழ்ந்திடினும்
தேனுள பாத மலர்த் திருமாலுக்குத் தித்திக்குமே

பொருள் – தேவர்கள் மற்றும் நித்யஸூரிகள் ஆகியவர்களுக்குக் கூட இந்த நூலில் கூறப்பட்ட இருப்புகள் மிகவும் அரியதாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் அத்தகைய இருப்புகள் நமக்கு உள்ளதாகவும், இப்படிப்பட்ட நிலையானது பொருந்தியுள்ளவர்களைக் கண்டு மகிழும்படியான பெருமை மிக்க இயல்பானது நமக்கு உள்ளதாகவும் நாம் திகழ்கிறோம். தாழ்ந்த எண்ணம் கொண்டவர்கள் இந்த நூலிலும் நம்மிடமும் குற்றங்கள் உள்ளது என்று எண்ணித் தூற்றினாலும், இந்த நூலானது தேன் நிரம்பிய தாமரை போன்ற திருவடிகளைக் கொண்ட ஸர்வேச்வரனுக்கு மகிழ்வையே உண்டாக்கும்.

வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம்
உள்ளத்து எழுதியது ஓலையில் இட்டனம் யாம் இதற்கென்
கொள்ளத் துணியினும் கோது என்று இகழினும் கூர் மதியீர்
எள்ளத்தனை உகவாது இகழாது எம் எழில் மதியே

பொருள் – வெண்மையான குதிரையாக அவதரித்த ஸ்ரீஹயக்ரீவன், எம்முடைய ஆசார்யனாக அவதாதம் செய்து, தகுந்த உபதேசம் என்னும் எழுதுகோல் மூலமாக எம்முடைய உள்ளத்தில் எழுதியவற்றை, நாம் இந்த நூலில் எழுதினோம். ஆகவே இந்த நூலில் என்ன குற்றம் உள்ளது (அல்லது நாம் இவ்விதம் எழுதியதில் என்ன குற்றம் உள்ளது)? கூர்மையான அறிவு கொண்டவர்களே! இந்த நூலை ஏற்றுக் கொண்டாலும் எமது அழகான மனமானது சிறிதளுவும் மகிழ்வில் துள்ளாது; இதனை ஏற்காமல், குற்றம் உள்ளதாக இகழ்ந்தாலும், அவர்களை எமது அழகான மனமானது சிறிதளுவும் இகழாது.

ரஹஸ்ய த்ரய ஸார: அயம் வேங்கடேச விபச்சிதா
சரண்ய தம்பித விதாம் ஸம்மத: ஸமக்ருஹ்யத

பொருள் – “ரஹஸ்ய த்ரய ஸாரம்” என்னும் இந்த நூலானது, வேங்கடேசன் எனப்படும் நம்மால், சரணம் அடையத்தக்க ஸர்வேச்வரனுடைய இயல்பை நன்றாக அறிந்தவர்களால் ஏற்றுக் கொள்ளும்படியாக உண்டாக்கப்பட்டதாகும்.

நிமகந அதிகாரம் ஸம்பூர்ணம்
ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம் ஸம்பூர்ணம்
ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் ஸம்பூர்ணம்
ஸ்வாமி வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்
தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்
மஹாலக்ஷ்மீ ஸமேத ஸ்ரீஹயக்ரீவன் திருவடிகளே தஞ்சம்
ஸ்ரீரங்க திவ்யதம்பதிகள் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 9)

12. எப்போதுமுண்டாகில் ஜந்ம மரணங்களுண்டாகிறபடி யென்னென்னில்; ஜந்மமாவது – தேஹ ஸம்பந்தம்; மரணமாவது – தேஹ வியோகம்.

அவதாரிகை – ஏதத் விரோதி சங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் “எப்போதுமுண் டாகில்” என்று தொடங்கி.

விளக்கம் – “ஆத்மா நித்யமானது” என்ற ஞானத்திற்கு விரோதியாக உள்ள சந்தேகத்தைத் தானே எழும்பிக் கொண்டு, அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது ஆத்மா ஸர்வகால வர்த்தியாயிருக்குமாகில் “ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத”, “ஸந்மூலாஸ் ஸோம்யேமாஸ் ஸர்வா: ப்ரஜா:”, “யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே”, “யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூம்யாம்” இத்யாதி ச்ருதி வாக்யங்களால் ஆத்மாவுக்குச் சொல்லப்படுகிற ஜந்ம மரணங்களுண்டாகிறபடி யென்னென்னில், அவற்றிற் சொல்லுகிற ஜந்மமாவது தேஹ ஸமபந்தம், மரணமாவது தேஹ வியோகமென்கை. நித்யனாகில் ஸ்ருஷ்டிக்கு முன்பு ஏகத்வாவதாரணம் கூடாதென்னில், ஏகத்வமாவது நாமரூப விபாகாபாவமாகையாலே கூடும். ஸம்ஹார தசையில ஆத்மாவில்லையாகில, ஈச்வரனுக்கு உபாதாந்தவங்கூடாது, அக்ருதாபயாகமக்ருத விப்ரணாசங்களும் வரும், ஆகையால் ஆத்ம நித்யத்வம்

கொள்ளவேணும். “ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்”, “ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ”, “நித்யோ நித்யாநாம்”, “ப்ரக்ருதிம் புருஷம்சைவ வித்யநாதீ உபாவபி”, “ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய:, அஜோ நித்யச் சாச்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே” என்று ஆத்ம நித்யத்வ ப்ரதிபாதகங்களான ச்ருதி ஸ்ம்ருதிகள் அநேகங்களிறே.

விளக்கம் – “ஆத்மா அனைத்து காலங்களிலும் உள்ளதாகும்” என்று கூறியதால், ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத - நான்முகன் உயிர்களைப் படைத்தான் - என்றும், ஸந்மூலாஸ் ஸோம்யேமாஸ் ஸர்வா: ப்ரஜா: - அனைத்தும் ஸத் என்ற ப்ரஹ்மத்தையே காரணமாகக் கொண்டவை ஆகும் – என்றும், யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே - அனைத்தும் எதனிடமிருந்து உற்பத்தி ஆனதோ – என்றும், யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூம்யாம் – ப்ரக்ருதியானது எந்த ப்ரஹ்மத்திடமிருந்து தோன்றியதோ, அத்தகைய ப்ரஹ்மமானது நீர் முதலாவற்றுடன் ஆத்மாவையும் படைத்தது – என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்கள் மூலம், ஆத்மாவிற்கு உரைக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவை எப்படி ஏற்கப்படும் என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவற்றில் கூறப்படும் பிறப்பு என்பது சரீரத்துடன் ஆத்மாவிற்கு ஏற்படும் ஸம்பந்தம், இறப்பு என்பது சரீரத்தை விட்டுப் பிரிதல் என்பது ஆகும். ஆனால் “ஆத்மா எப்போதும் உள்ளதாகும்”, என்று கூறினால், “ஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது” என்று கூறுவது பொருந்தாது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். “ஒன்றாகவே இருந்தது” என்றால் அனைத்து ஒரு ப்ரஹ்மமாக, பெயர் மற்றும் ரூபம் என்ற வேறுபாடுகள் இன்றி உள்ளதால் பொருந்தும். ப்ரளய காலத்தில் ஆத்மா இல்லையென்றால், ஈச்வரனுக்கு உபாதானக்காரணமாக உள்ள நிலையானது பொருந்தாது; மேலும் காரணம் இன்றி கர்மபயன்கள் எற்படுகின்றன என்ற தோஷமும் ஏற்படும். எனவே ஆத்மாக்கள் நித்யமே ஆகும் என்றே கொள்ளவேண்டும். கட. (2-18) – ந ஜாயதே ந ம்ரியதே வா விபச்சித் - அவன் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை – என்றும், ச்வே. (1-19) - ஜ்ஞா ஜ்ஞௌ த்வா அஜௌ ஈச அநீசௌ - அறிந்தவன், அறியாதவன் என்று இரண்டு பிறப்பற்றவர்கள் ஈசன், அநீசன் என்று கூறப்படுகிறார்கள் – என்றும், ச்வே. (6-13) - நித்யோ நித்யாநாம் - நித்யர்களுக்குள் நித்யனாக உள்ளவனும் – என்றும், கீதை

(13-19) - ப்ரக்ருதிம் புருஷம் ச ஏவ வித்த்யநாதீ உபாவபி - ப்ரக்ருதி, புருஷன் என்ற ஜீவாத்மா ஆகிய இரண்டும் எப்போதும் சேர்ந்தே எல்லையற்ற காலமாக உள்ளன – என்றும், கீதை (2-20) - ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய:, அஜோ நித்யச் சாச்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே – ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை; முன்பு உண்டாகி பின்பு இல்லை என்பதும் இல்லை; ஆத்மா பிறப்பற்றவன்; நித்யமானவன்; அனைத்து காலங்களிலும் உள்ளவன்; பழமையானவன்; சரீரம் கொல்லப்பட்டாலும் ஆத்மா கொல்லப்படாதவன் - என்றும் உள்ள பல ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி வாக்கியங்கள், ஆத்மாவின் நித்யமாக உள்ள தன்மையை வெளிப்படுத்துகின்றன.

13. அணுவானபடி என்னென்னில்.

அவதாரிகை – அசித் விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாயிருந்தாலும் விபுவாயிருக்கலாமிறே; ஏவம் பூதமான ஆத்ம ஸ்வரூபமணுவென்று அறியும்படி யெங்ஙனே என்கிற ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தையநுவதிக்கிறார் (அணுவானபடி யென்னென்னில்) என்று.

விளக்கம் – அசித் பொருள்களைக் காட்டிலும் மேம்பட்டதாகவும், ஜடப்பொருள் அல்லாததாகவும், ஆனந்தரூபமாக உள்ளதாகவும், நித்யமாகவும் இருக்கின்ற ஆத்மாவானது "எங்கும் நிறைந்தது" என்ற தன்மை கொண்டிருக்கலாம் அல்லவா? ஆனால் இப்படிப்பட்ட ஆத்மாவானது அணு அளவே ஆனது என்று எப்படி அறியப்படுகிறது என்று அறிவுள்ளவர்கள் எழுப்பும் கேள்வியை உரைக்கிறார்.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 278)

4-5-5 ஆற்ற நல்லவகை காட்டும் அம்மானை அமரர்தம்
ஏற்றை எல்லாப் பொருளும் விரித்தானை எம்மான் தன்னை
மாற்ற மாலை புனைந்தேத்தி நாளும் மகிழ்வெய்தினேன்
காற்றின் முன்னம் கருகி வினைநோய்கள் கரியவே

பொருள் - படிப்படியாக அனுபவிப்பதற்கு ஏற்றபடியான மேன்மையான ப்ரபத்தி பரஜ்ஞாநம் மற்றும் பரமபக்தி ஆகிய விதங்களை, தன்னை அனுபவிக்கின்ற அடியார்களுக்கு வெளிப்படுத்துகின்ற ஸ்வாமியை, நித்யஸூரிகளுடைய தலைவனை, அனைத்து ஆழ்பொருள்களையும் ஸ்ரீமத்பகவத்கீதை மூலமாக வெளிப்படுத்தியவனை, இப்படியாக எனக்குத் தலைவனைக் குறித்த ஞானம் மற்றும் அவன் குறித்த ப்ரேமை ஆகியவற்றை அடையவிடாமல் தடுப்பதான எனது அனைத்து பாபங்களும் நோய்களும், காற்றின் முன்பாக சட்டென்று ஓடும்படியாக, சொற்கள் கொண்டு மாலை புனைந்து அவனைத் துதித்த நான், எப்போதும் மகிழ்வு கொண்டவன் ஆனேன்.

அவதாரிகை - தான் ஸர்வாதிகனாய் வைத்து அர்ஜுநனுக்கு ஸர்வார்த்தங்களையும் ஸாத்மிக்க ஸாத்மிக்க அருளிச்செய்தாற்போலே எனக்குத் தன்படிகளைக் காட்ட, கண்டு அநுபவித்து நான் என்னுடைய ப்ரதிபந்தகங்களெல்லாம் போம்படி திருவாய்மொழி பாடி நிரதிசயாநந்தியானேன் என்கிறார்.

விளக்கம் - அனைவருக்கும் எஜமானனாக இருந்தபடி, அர்ஜுனனை முன்னிறுத்தி, அவனுக்கு அனைத்துவிதமான ஆழ்பொருள்களையும், அவன் பொறுக்கப் பொறுக்க நிதானமாக அருளிச்செய்தான். இவ்விதம் எனக்கு அவன் தன்னைக் குறித்து உணர்த்தினான். அதனைக் கண்டு அனுபவித்த நான், எனது தடைகள் அனைத்தும் நீங்கப் பெற்றவனாக, திருவாய்மொழியைப் பாடி, எல்லையற்ற ஆனந்தம் கொண்டவன் ஆனேன் என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆற்ற) அமைய. பொறுக்கப்பொறுக்க. குளப்படியிலே கடலை மடுத்தாற்போலேயன்றிக்கே, ஸாத்மிக்க ஸாத்மிக்கவாயிற்று, தன் கல்யாணகுணங்களை அநுபவிப்பித்தது. "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்ற அநந்தரத்திலே "வீற்றிருந்தேழுலகி"லநுபவத்தை அநுபவிப்பித்தானாகில், என்னைக் கிடையாதுகிடீர். (நல்லவகை காட்டும்) தன் குணசேஷ்டிதங்களை அநுபவிப்பிக்கும். (அம்மானை) உடையவன் உடைமையின் நிலையறிந்தன்றோ நடத்துவது. (அமரர்தம் ஏற்றை) க்ஷுத்ர விஷயங்களையும் உண்டறுக்கமாட்டாதே போந்த என்னைக்கிடீர் நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணுகிற தன்னை அநுபவிப்பித்தது. தனக்கு ஒரு குறையுண்டாயன்று, போக்தாக்கள்பக்கல் குறையுண்டாயன்று; தான் ஸர்வேச்வரனாவது, தன் படிகளை அநுபவிப்பிக்க நித்யஸூரிகளையுடையனாவது; இப்படியிருக்கக்கிடீர் என்னை யநுபவிப்பித்தது.

விளக்கம் - (அற்ற) – அமைய. அதாவது பொறுக்கப்பொறுக்க மெதுவாக. மிகவும் சிறிய குழியில் கடலைப் புகுந்துவது போன்று அல்லாமல், மிகவும் பொறுமையாக தனது திருக்கல்யாண குணங்களை அனுபவிக்கும்படிச் செய்தான். திருவிருத்தம் (1) – இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - என்று கூறிய உடனேயே, "வீற்றிருந்த" என்பதற்கு ஏற்ப ஒரு அனுபவத்தை நான் அடையும்படிச் செய்திருந்தான் என்றால், "நான் அவனை முற்றிலுமாக அனுபவித்த ஒருவன்" என்றாக மாட்டேன் அல்லவோ? (நல்லவகை காட்டும்) - தனது திருக்கல்யாண குணங்கள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை அனுபவிக்கும்படிச் செய்தவன். (அம்மானை) - ஒரு பொருளுக்குச் சொந்தக்காரன் தனக்குச் சொந்தமான பொருளின் நிலையை நன்றாக அறிந்தவன் அல்லவோ? (அமரர்தம் ஏற்றை) - தாழ்ந்த விஷயங்களாக உள்ளபோதிலும் அவற்றை அனுபவிக்காமல் விடுவதில்லை என்றுள்ள என்னை

அல்லவோ நித்யஸூரிகள் எப்போதும் அனுபவித்தபடி உள்ள தன்னை அனுபவிக்கும்படிச் செய்தான்? தனக்கும் எந்தக் குறையும் இன்றி, தன்னை அனுபவிப்பவர்களுக்கும் எந்தக் குறையும் இன்றி உள்ளவன். தான் ஸர்வேச்வரனாக உள்ளபோதிலும், தன்னை எப்போதும் அனுபவிக்கும் நித்யஸூரிகள் உள்ளபோதிலும், தன்னைஅனுபவிக்கும்படியாக என்னைச் செய்தான்.

வ்யாக்யானம் - (எல்லாப்பொருளும்) தம்மையநுபவிப்பித்த ப்ரகாரத்தைச் சொல்லுகிறார். முதல் வார்த்தையிலே "தர்மாதர்மங்களை இன்னதென்று அறிகிறிலேன்; "சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்ற அர்ஜுநனுக்கு, ப்ரக்ருதி புருஷ விவேகத்தைப் பிறப்பித்து, கர்மயோகத்தை விதித்து, "அது தன்னை, கர்த்ருத்வத்தைப் போகட்டுப் பலாபிஸந்தி ரஹிதமாக அநுஷ்டி" என்று, அநந்தரம் ஆத்மஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, அநந்தரம் பகவத்ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, அநவரத பாவநாரூபமான உபாஸந க்ரமத்தையறிவித்து, இவ்வளவும் கொண்டு போந்து இதின் அருமையை இவன் நெஞ்சிலேபடுத்தி, "இவை அசக்யம்" என்று சோகித்தவநந்தரம் "ஆகில், என்னைப் பற்றி நிர்ப்பரனாயிரு" என்று தலைக்கட்டினாற் போலேயாயிற்று, க்ரமத்தாலே தன் குணசேஷ்டிதங்களை இவரையநுபவிப்பித்தபடி.

விளக்கம் - (எல்லாப்பொருளும்) - தன்னை அவன் அனுபவிக்கும்படிச் செய்த விதங்களை உரைக்கிறார். தொடக்கத்திலேயே அர்ஜுனன், "தர்மம், அதர்மம் என்றால் என்ன என்று நான் அறியவில்லை. கீதை (2-7) - சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் - நான் உனது சிஷ்யனாக உன்னைச் சரணம் அடைந்தேன், எனக்கு உபதேசிப்பாயாக", என்று உரைத்தான். அவனுக்குச் சரீரம் மற்றும் ஆத்மா குறித்த விவேகத்தை அளித்தான்; கர்மயோகம் குறித்து உபதேசம் செய்து அதனை விதித்தான்; "கர்மத்தை நான் செய்கிறேன் என்ற எண்ணம் இன்றியும், கர்மபலனில் விருப்பம் இன்றியும் இயற்றுவாயாக", என்று கூறினான்; தொடர்ந்து, ஆத்ம ஞானத்தை அளித்தான்; அதனைத் தொடர்ந்து பகவத் ஞானத்தை அளித்தான்; மேலும் எப்போதும் நீங்காத உறுதியான உபாஸன வழியை உரைத்தான். இவை அனைத்தையும் உரைத்து, அவற்றின் மேன்மையை அர்ஜுனனுடைய நெஞ்சத்தில்

ஆழமாகப் பதித்தான். இவற்றைக் கேட்ட அர்ஜுனன், "இதனைக் கைக்கொள்ள எனக்குச் சக்தி இல்லை" என்று உரைத்தான். அப்போது க்ருஷ்ணன், "அப்படியானால் என்னை அடிபணிந்து, உனது பாரங்கள் அனைத்தையும் என்னிடம் அளித்தவனாக இருப்பாயாக", என்று தனது உபதேசத்தை நிறைவு செய்தான். இதனைப் போன்றே படிப்படியாகத் தனது குணங்கள் மற்றும் செயல்களை நம்மாழ்வார் அனுபவிக்கும்படிச் செய்தான்.

வ்யாக்யானம் - (எம்மான் தன்னை) அர்ஜுநனுக்கு பலித்ததோ இல்லையோ, அறியேன்; அந்த உபதேச பலம் நான் பெற்றேன். அவனும் இவ்வர்த்தத்தைக் கேட்டவநந்தரம் "ஸ்த்திதோஸ்மி" என்னச்செய்தேயும், "நூநம் ஸம்சயோஸ்தி" என்றானிறே; உபதேசிக்கிறவனும் ஸர்வஸாதாரணனாய், உபதேசிக்கிற அர்த்தமும் ஸர்வ ஸாதாரணமாகையாலே, அதறிந்த இவர்க்குப் பலித்ததென்னத் தட்டில்லையிறே; "விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்னக் கடவதிறே, இவர் மநோரதத்திலே நின்று போலே காணும் அருளிச்செய்தது.

விளக்கம் - (எம்மான் தன்னை) - அவனுடைய உபதேசங்கள் அர்ஜுனனைச் சென்று அடைந்ததோ என நான் அறியேன்; ஆனால் அந்த உபதேசத்தின் பலனை நான் அடைந்தேன். அர்ஜுனன் கீதையில் (18-73) - ஸ்த்திதோஸ்மி - தெளிவாக உள்ளேன் - என்று உரைத்தான்; ஆயினும் அநுகீதையில், "நூநம் ஸம்சயோஸ்தி – சந்தேகத்துடன் உள்ளேன்", என்றான் அல்லவோ? ஆனால் அர்ஜுனனுக்கு உபதேசித்த விஷயங்களை இவர் அறிந்ததாகக் கூறுவது எப்படி? உபதேசம் செய்தவனும், செய்யப்பட்ட உபதேசமும் பொதுவானது என்பதால், அதனை அறிந்த இவருக்கு உபதேசம் பலன் அளித்ததில் எந்தக் குறையும் இல்லை. இவ்விதம் அறிந்தவர் வேறு யாரேனும் உள்ளாரா என்றால், நாச்சியார் திருமொழி (11-10) – விட்டுசித்தர் கேட்டிருப்பர் – என்கிறார். பெரியாழ்வாருடைய மனம் என்ற ரதத்தில் நின்று உபதேசம் செய்தது போன்று நிகழ்ந்தது.

வ்யாக்யானம் - (மாற்றமாலை புனைந்தேத்தி) சொன்மாலையைத் தொடுத்தேத்தி. அவன் பண்ணின உபகாரத்திலே தோற்று ஏத்தினார். அது திருவாய்மொழியாய்த் தலைக் கட்டிற்று. மாற்றம் - சொல்லு. (நாளும் மகிழ்வெய்தினேன்)

நித்யாநந்தியானேன். எய்துகை – கிட்டுகை. “இப்படி பெரிய பேற்றைப் பெற்றீராகில் விரோதி செய்தது என்?” என்ன, (காற்றின் முன்னம் கடுகி வினைநோய்கள் கரியவே) வினைகளும் வினைப்பயனான ஜந்மங்களும் காற்றிற்காட்டிலும் கடுகி தக்தமாயிற்றின. புதுப்புடைவை அழுக்குக் கழற்றுமாபோலே, க்ரமத்தாலே போக்கவேண்டுவது தானே போக்கிக் கொள்ளப்பார்க்குமன்றிறே; அவன் போக்குமன்று அவனுக்கு அருமைப்பட வேண்டாவே; “வினைப்படலம் விள்ள விழித்து” என்கிறபடியே, ஒருகால் பார்த்துவிட அமையுமே; “மேரு மந்தர” இத்யாதி. நிதாநஜ்ஞனான பிஷக்கைக் கிட்டின வ்யாதி போலேயிறே ஸர்வேச்வரனை கிட்டினால் இவை நசிக்கும்படி. “வானோ மறிகடலோ” இத்யாதி.

விளக்கம் - (மாற்றமாலை புனைந்தேத்தி) - சொல் என்னும் மாலையைத் தொடுத்து ஏத்தி. அவன் தனக்குச் செய்த உபகாரங்களைக் கண்டு, அதில் மயங்கி, அவனை ஏத்தினார்; இதுவே திருவாய்மொழியாக நிறைவேறியது. (நாளும் மகிழ்வெய்தினேன்) - எப்போதும் ஆனந்தம் நிறைந்தவனாக உள்ளேன். “இவ்விதம் கிடைத்தற்கு அரிய பேற்றைப் பெற்ற உம்முடைய விரோதிகளுக்கு என்ன ஆயிற்று?”, என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். (காற்றின் முன்னம் கடுகி வினைநோய்கள் கரியவே) – வினைகள் மற்றும் அந்த வினைகளுடைய பயனாகிய பிறவிகள் ஆகிய அனைத்தும், காற்றைக் காட்டிலும் விரைவாக எரிந்தன. புதுப்புடவையானது அழுக்கு நீங்குவது போன்று, இவை அனைத்தும் நாளடைவில் அழியாமல், தாங்களாகவே தங்களை போக்கிக் கொள்ள முயன்று ஓடுகின்றன. ஏனென்றால் அவன் விலக்க முயலும் நாளில், அவனுக்குச் சிரமம் ஏற்படாது அல்லவோ? பெரியதிருவந்தாதி (76) - வினைப்படலம் விள்ள விழித்து – என்பதற்கு ஏற்ப ஒருமுறை பார்த்தால் போதுமானது. ஸ்ரீவிஷ்ணுதர்மத்தி – மேரு மந்தர - மேருமலை போன்று பாப கர்மங்களும் உயர்ந்து காணப்பட்டாலும் க்ருஷ்ணனைக் கண்டு அழிகின்றன – என்பது காண்க. நோய் ஒன்றின் மூல காரணத்தை அறிந்த வைத்தியனைக் கிட்டினால் நோய் அகல்வது போன்று, ஸர்வேச்வரனை அடைந்தால் இவை அனைத்தும் அழிகின்றன.

4-5-6 கரியமேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை
உரிய சொல்லால் இசைமாலைகளேத்தி உளப்பெற்றேற்கு
அரியதுண்டோ எனக்கு என்று தொட்டும் இனியென்றுமே

பொருள் - கருமையான அழகிய திருமேனியின் மீது வெண்மையான சூர்ணத்தை மிகவும் சிறிய அளவில் இடுகின்ற, பெரியதான அழகான திருக்கண்கள் கொண்டவனும், நித்யஸூரிகளுடைய தலைவனும் ஆகிய ஸர்வேச்வரனைத் துதிக்க ஏற்றதாக உள்ள சொற்கள் கொண்டு அமைக்கப்பட்டதான இசையுடன் கூடிய மாலைகள் கொண்டு நான் துதிக்க எண்ணுகிறேன். இப்படிப்பட்ட எனக்கு, இந்த நாள் தொடங்கி, இனியும் கிடைக்க உள்ள அரிதான பொருள் வேறு ஏதேனும் உள்ளதா?

அவதாரிகை - ஸர்வேச்வரன் திருவடிகளிலே அடிமை செய்யவும் பெற்று, ப்ரதிபந்தகமும் போகப்பெற்றேனென்றார் கீழ்; ஆனால், "இனி உமக்குச் செய்யவேண்டுவதென்?" என்றான் ஈச்வரன்; இதுக்கு முன்பு பெறாததாய் இனிப் பெறவேண்டுவதொன்றுண்டோ? என்கிறார் இதில்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் கைங்கர்யம் செய்யும் சந்தர்ப்பம் பெற்றது மட்டும் அல்லாமல், எனது அனைத்துவிதமான தடைகளும் நீங்கவும் பெற்றேன்", என்றார். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "நான் இனி உமக்கு வேறு என்ன செய்யவேண்டும்?", என்றான். இதற்கு ஆழ்வார், "இதுவரை நான் அடையாததாக, இனிப் பெற உள்ள பேறு வேறு ஏதேனும் உள்ளதோ?", என்கிறார்.

வ்யாக்யானம் - (கரியமேனி மிசை) மேனியென்று – நிறமாய், திருக்கண்களில் கருவிழியினுடைய கறுத்த நிறத்தால் வந்த அழகுக்கு மேலே. "கரியவாகிப் புடை பரந்து" என்னக் கடவதிறே. (வெளிய நீறு) அஞ்சந சூர்ணம். அத்தை அளவே கொண்டு அலங்கரிக்கும். "ஆராரயில்வேற் கண் அஞ்சனத்தின் நீறணிந்து" என்னக் கடவதிறே. (சிறிதே இடும்) அழகுக்கு இடவேண்டுவதில்லையே, இனி

மங்களார்த்தமாகையாலே அளவேயாயிற்று இடுவது. (பெரிய கோலம்) ஒப்பனை வேண்டாதபடி அழகு அளவிறந்திருக்கிறபடி. (தடங்கண்ணன்) போக்தாக்களளவன்றிக்கே போக்யம் மிக்கிருக்கிறபடி. அதவா, (கரிய இத்யாதி) கறுத்த நிறத்தாலே வந்த அழகுக்கு மேலே அதுக்குப் பரபாகமான திருக்கண்களிலே அஞ்சநத்தையிடுமென்றுமாம். அன்றிக்கே, "கரி என்று - ஆனையாய், அத்தால் நினைக்கிறது -குவலயாபீடமாய், குவலயாபீடமானது, அம்மேனியிலே – அழகிய திருமேனியிலே, வெளிய – சீற, அத்தை, நீறு சிறிதேயிடும் – பொடியாக்கும்" என்று ஒரு தமிழன் நிர்வஹித்தான்.

விளக்கம் - (கரியமேனி மிசை) - மேனி என்பது நிறத்தைக் கூறுகிறது. திருக்கண்களில் உள்ள கருவிழியின் கறுத்த நிறம் காரணமாக வந்து அழகுக்கும் மேலே. அமலனாதிபிரான் (8) – கரியவாகிப் புடை பரந்து – என்பது காண்க. (வெளிய நீறு) - அஞ்சன சூர்ணம். அதனைச் சிறிய அளவில் கொண்டு அலங்கரிக்கும். சிறிய திருமடல் – ஆரார் அயில்வேற் கண் அஞ்சனத்தின் நீறணிந்து - என்பது காணலாம். (சிறிதே இடும்) - அழகுக்கு அழகு சேர்ப்பதற்காக இடவேண்டியதில்லை. மங்களத்தின் காரணமாக உள்ளதால் சிறிய அளவில் இருக்கிறது. (பெரிய கோலம்) - எந்தவிதமான ஒப்பனையும் அவசியம் இல்லாதபடி, அழகி அளவற்று உள்ள நிலை. (தடங்கண்ணன்) - அனுபவிப்பவர்களுடைய அளவைக்காட்டிலும் அனுபவிக்கின்ற இன்பம் அதிகமாக உள்ள நிலை. அல்லது வேறுவிதமாகவும் கூறலாம். (கரிய இத்யாதி) - கறுத்த நிறம் காரணமாக வந்த அழகுக்கும் மேலே, அதற்குச் சேரும்விதத்தில் உள்ள திருக்கண்களில் அஞ்சனத்தை இடும் என்றும் கூறலாம். அல்லது, கரி என்று யானையைக் கூறி, அதன் மூலம் குவலயாபீடத்தை எண்ணி, அந்த யானையானது அழகான திருமேனியில் சீறியபடி வரும்போது, அதனைப் பொடியாக்கும் என்று கூறலாம்.

வ்யாக்யானம் - (விண்ணோர் பெருமான்) இக்கண்ணழகுக்கு போக்தாக்கள் நித்யஸூரிகளாயிற்று. (பெருமான்) த்ரிபாத் விபூதியாக அநுபவியா நின்றாலும், அநுபூதாம்சம் சுருங்கி அநுபாவ்யாம்சம் விஞ்சியிருக்கும். (உரிய சொல்லால்) அவயவ சோபை அது, போக்தாக்கள் அவர்கள், இப்படியிருத்தால் "தாம் பாடுகிற கவிகளுக்கு இது விஷயமன்று" என்று மீளவிறே அடுப்பது. இப்படியிருக்கச்

செய்தேயும், இவ்விஷயத்துக்கு நேரே வாசகமான சொல்லாலே, (இசைமாலைகள்) "ஸம்ச்ரவே மதுரம் வாக்யம்" என்கிறபடியே, திருச்செவி சாத்தலாம்படியிருக்கை. (ஏத்தி உள்ளப் பெற்றேற்கு) ஏத்தியநுபவிக்கப் பெற்ற எனக்கு. (அரியது உண்டோ) "நாநவாப்தமவாப்தவ்யம்" என்கிறபடியே, இதுக்கு முன்பு அடையாததாய் இனி எனக்கு அடையப்படுவது ஒன்று உண்டோ? (எனக்கு) "ஈச்வரோஹம்" என்றிருக்கிற ஸம்ஸாரத்திலே சேஷத்வம் ரஸிக்கப் பெற்று, ஸ்வரூபாநுரூபமாக வாசிகமான அடிமை செய்யப் பெற்று, "வினை நோய்கள் கரிய" என்று விரோதி கழியப் பெற்றிருக்கிற எனக்கு. (இன்று தொட்டும் இனியென்றுமே) அடிமையிலிழிந்த என்று தொடங்கி இனி மேலுள்ள காலமெல்லாம் அரியது இல்லை. "அதஸோபயங்கதோ பவதி" என்கிறபடியே, அநந்தரம் "தீர்ப்பாரை யாமினி"யாவது அறியாமலிறே இவர் அவ்வார்த்தை சொல்லுகிறது.

விளக்கம் - (விண்ணோர் பெருமான்) - இந்தக் கண்ணழகை அனுபவிப்பவர்கள் நித்யஸூரிகள் ஆவர். (பெருமான்) - பரமபதத்தில் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து நின்று அனுபவித்தாலும் கூட, அனுபவிக்கப்பட்ட பகுதியானது குறைவாகவும், அனுபவிக்கப்பட வேண்டிய பகுதியானது மிகவும் அதிகமானதாகவும் உள்ளது. (உரிய சொல்லால்) – "அவயவங்களுடைய எழில் அத்தகையது. அனுபவித்தபடி உள்ளவர்கள் அவர்கள்" என்ற நிலையாக உள்ளது; அப்படியானால், "நம்மால் கவிபாடுவதற்கு ஏற்ற விஷயம் இது அல்ல", என்று கைவிடுதல் அல்லவோ சிறந்தது? ஆனால் இவ்விதமாக உள்ளபோதிலும், அந்த விஷயத்திற்கு ஏற்றபடி உள்ள சொற்களைக் கொண்டு. (இசைமாலைகள்) – ஸுந்தரகாண்டம் (31-1) - ஸம்ச்ரவே மதுரம் வாக்யம் - செவிகளால் கேட்பதற்கு இனிமையான சொற்கள் – என்பதற்கு ஏற்ப அவன் தன்னுடைய திருச்செவியால் கேட்கலாம்படியாக உள்ள சொற்கள். (ஏத்தி உள்ளப் பெற்றேற்கு) - அவனை ஏத்தி அனுபவிக்கப் பெற்ற எனக்கு. (அரியது உண்டோ) – கீதை (3-22) - நாநவாப்தமவாப்தவ்யம் - அடைய வேண்டியது எதுவும் அடையப்படாமல் இல்லை - என்பதற்கு ஏற்ப, இதற்கு முன்பு நான் அடையாததாகவும், இனிப் புதிதாக அடையப்பட வேண்டியதாகவும் எதும் உள்ளதோ? (எனக்கு) – "ஈச்வரோஹம் - நானே ஈச்வரன்" என்பதாக உள்ள ஸம்ஸாரத்தில், அடிமைத்தனமானது ரஸிக்கப் பெற்று, எனது ஆத்ம ஸ்வரூபத்திற்குச் சேரும்படியான சொற்களைக் கொண்டு

கைங்கர்யம் செய்யப் பெற்று, திருவாய்மொழி (4-5-5) - வினை நோய்களை கரிய - என்றபடி விரோதிகள் அனைத்தும் நீங்கப் பெற்றுள்ள எனக்கு. (இன்று தொட்டும் இனியென்றுமே) - அவனுடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டு நிற்கும் எனக்கு, இனிமேல் உள்ள காலம் அனைத்தும் கடினமானது அல்ல. தைத்திரீயம் – அதஸோபயங்கதோ பவதி - அவன் பயம் அற்றவன் ஆகிறான் - என்பதற்கு ஏற்ப, “தீர்ப்பாரை யாம் இனி” என்று இவர் உரைப்பது உள்ளது.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

சது: ச்லோகீ

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

வ்யாக்யானம்

மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 24)

அப்படிப்பட்ட ப்ரளயகாலத்தில், நாராயணன் உபநிஷத் – நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணாத் ருத்ரோ ஜாயதே - நாராயணனிடமிருந்து நான்முகன் தோன்றுகிறான், நாராயணிடமிருந்து ருத்ரன் தோன்றுகிறான் - என்றும், ச ஏகாகீ ந ரமேத - தனியாக இருந்தபோது அவன் மகிழ்வுடன் இல்லை - என்றும், சாந். (6-2-3) - பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி – “நான் பலவாகக் கடவேன்” என்று ஸங்கல்பம் செய்தது – என்றும், தை. (2-6-1) - தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அநுப்ராவிசத் – இந்த அனைத்தையும் படைத்து அதற்குள் புகுந்தான் - என்றும், ப்ரு. (1-4-7) - தந்நாம ரூபாப்யாம் வ்யாக்ரியத - ப்ரபஞ்ச வடிவாக உள்ள பூதஸூக்ஷ்மம் என்பது ஸ்ருஷ்டிக்கு முன்பு பெயர் மற்றும் ரூபங்கள் இன்றியே இருந்தது - என்றும், தை. (3-11) - ஸர்வாணி ரூபாணி விசித்ய தீரோ நாமாநி க்ருத்வாபி வதந்யதாஸ்தே - அனைத்தையும் படைத்து, அவற்றுக்கு நாமரூபங்கள் கொடுத்து, அந்தப் பெயர்களால் அழைத்தபடி உள்ளான் – என்றும், மஹா. நா. (1-8) - ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்யுத: புருஷாவதி - அனைத்து அசைவுகளும் அந்தப் புருஷனிடமிருந்தே வந்தன - என்றும், மநு. (1-8, 9) - அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யம் அபாஸ்ருஜத் || தத் அண்டம் அபவத்வைமம் ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம் | தஸ்மிந் ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா ஸர்வ லோக பிதாமஹ: - (பரமாத்மா) தனது ஸங்கல்பம் மூலமாக ஜலத்தை உண்டாக்கி, அதில் தனது

வீர்யத்தை வைத்தான். இது தங்கமயமான முட்டையாக மாறி, ஆயிரம் கிரணங்கள் கொண்ட சூரியனுக்கு ஒப்பாக ப்ரகாசித்தது. அதிலிருந்து, அனைத்து லோகங்களுக்கும் பாட்டனாராகிய நான்முகன் தோன்றினான் – என்றும், மநு. (1-6) – தத: ஸ்வயம்பூ: பகவாந் அவ்யக்தோ வ்யஞ்ஜயந் இதம் | மஹாபூதாதி வ்ருத்தௌஜா: ப்ராதுராஸீத் தமோநுத: - ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன், ஸ்வயம்பூவாகிய நாராயணன், அதுவரை புலப்படாமலிருந்து, மிகுந்த ப்ரகாசத்துடன் வெளிப்பட்டான்; மிகுந்த தேஜஸ்ஸுடன் தனது கட்டுப்பாட்டில் உள்ள பஞ்சபூதங்களை, இருளை விரட்டும்விதமாக வெளிப்படுத்தினான் - என்றும், திருவாய்மொழி (4-10-1) - நான்முகன் தன்னொடு தேவர் உலகோடு உயிர் படைத்தான் - என்றும், நான்முகன் திருவந்தாதி (1) – நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் – என்றும் இப்படியாக நான்முகன் முதலானோருடைய ஸ்ருஷ்டியைக் குறித்து ஸர்வேச்வரன் உகந்தபடி உள்ளான். அப்போது ஸ்ரீகுணரத்னகோசம் (4) - யத் ப்ரூ பங்கா: ப்ரமாணம் ஸ்திர சர ரசநா தாரதம்யே முராரே: வேதாந்தா: தத்வசிந்தாம் முரபித் உரஸி யத் பாத சிஹ்நை: தரந்தி - இந்த உலகில் ஸ்ரீமந்நாராயணனின் படைப்பில் பல ஏற்ற தாழ்வுகள் உள்ளன. இவற்றுக்குக் காரணமாக உள்ளது இவளது புருவத்தின் அசைவுகளே ஆகும். இவள் தனது புருவ அசைவு மூலம் யாரை உயர்த்த வேண்டும் என்று கூறுகிறாளோ, ஸ்ரீமந் நாராயணன் உடனே அப்படியே செய்து விடுகிறான். யார் ஒருவனது திருமார்பில் மஹாலக்ஷ்மியின் திருவடி அடையாளம் உள்ளனவோ – என்றும், ஸ்ரீகுணரத்னகோசம் (2) - உல்லாஸ பல்லவிதபாலித ஸப்தலோகீ நிர்வாஹ கோரகித நேம கடாக்ஷ லீலாம் ஸ்ரீரங்க ஹர்ம்யதல மங்கள தீப ரேகாம் ஸ்ரீரங்கராஜ மஹிஷீம் ச்ரியம் ஆச்ரயாம: - இவள் தனது பார்வையை, அரும்பானது மெல்ல விரிவது போன்று, மெதுவாகத் திருக்கண்களைத் திறந்து பார்க்கிறாள். அந்தப் பார்வையின் காரணமாக ஏழு உலகங்களும் மலர்ந்து தளிர்த்து காணப்படுகின்றன. இப்படியாகத் தனது கடாக்ஷம் நிறைந்த பார்வையை எங்கும் பரவ விடுகிறாள். அது மட்டும் அல்ல. இவள் ஸ்ரீரங்கத்தில் பெரிய பெருமாள் சயனித்துக் கொண்டுள்ள விமானத்தில் இருக்கும் மங்கள விளக்காக உள்ளாள். இப்படிப்பட்ட உயர்ந்த தன்மைகளை உடையவள் யார் என்றால், பெரியபெருமாளான ஸ்ரீரங்கநாதனின் பட்டமஹிஷியாக உள்ள ஸ்ரீரங்கநாச்சியார் ஆவாள். இப்படிப்பட்ட

ஸ்ரீரங்கநாயகியை நாம் வணங்கி நிற்போம் – என்றும் இவளுடைய கடாக்ஷம் காரணமாகவே அனைத்தும் படைக்கப்படுகிறது.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

… தொடரும்